சுருக்கம்

கைத்தறி தொழில் – தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் தொகையின் முழு பங்களிப்பினையும் அரசுக் கணக்கிலிருந்தே வழங்க கொள்கை அளவிலான ஆணை, தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்திற்கான வட்டி வீதத்தினை 01.04.2019 முதல் 9.5 விழுக்காட்டிலிருந்து 6.5 விழுக்காடாக மறுநிர்ணயம் செய்தும் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த கூடுதல் நிதியாக ரூ.8,00,00,000/– ஒப்பளிப்பு செய்தும் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.52

நாள் 30.03.2022
பிலவ, பங்குனி 16
திருவள்ளுவராண்டு 2053
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.53, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 24.03.1999.
2. அரசாணை (நிலை) எண்.79, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 28.11.2003.
3. அரசாணை (நிலை) எண்.169, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 27.12.2011.
4. அரசாணை (நிலை) எண்.193, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 25.09.2014.
5. அரசாணை (நிலை) எண்.26, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 16.02.2021.
6. அரசாணை (நிலை) எண்.45, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 25.03.2021.
7. கைத்தறி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடிதங்கள் ந.க.எண்.7516/2018/சி2, நாள் 23.04.2021 மற்றும் 26.11.2021.

______

**ஆணை:**

நெசவாளர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும் அதன் மூலம் அவர்களது எதிர்கால பாதுகாப்பிற்கு உறுதி அளிக்கவும் 1975–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு

கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1985-1986 முதல் 2006-2007 வரை மத்திய சேமிப்பு நிதி திட்டத்தின்கீழ் இந்திய அரசு இத்திட்டத்தில் தனது பங்களிப்பை செலுத்தி வந்தது. 12.07.2012 முதல் இத்திட்டத்தின்கீழ், உறுப்பினராக உள்ள நெசவாளர், தாம் ஈட்டும் கூலியில் செலுத்தும் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீத சந்தாத் தொகைக்கு ஈடாக மாநில அரசும் தனது பங்காக வழங்கி வரும் எட்டு பைசா வீதத் தொகையும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 01.04.2003 முதல், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டக் கணக்கிலிருந்த இருப்புத் தொகைக்கு வட்டி விகிதம் 9.5 விழுக்காடாக நிர்ணயம் செய்து, வட்டித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதில், 6.5 விழுக்காடு வட்டித் தொகை, மேற்படி திட்டக் கணக்கில் செலுத்தப்பட்ட, சம்பந்தப்பட்ட நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும் என்றும், எஞ்சிய 3 விழுக்காடு வட்டித் தொகையானது, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டன.

3. மேலே, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும், மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.400/-லிருந்து ரூ.1,000/-ஆகவும் (அதாவது அரசின் பங்களிப்பு ரூ.800/- மற்றும் மேற்படி 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.200/-), தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும், மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.550/-லிருந்து ரூ.1,000/-ஆகவும் (அதாவது அரசின் பங்களிப்பு ரூ.650/- மற்றும் மேற்படி 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.350/-) உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் நடப்பு பயனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகையினை வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டு மாதந்தோறும் ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதிய பயனாளிகள் அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் சேர்க்கப்பட வேண்டும் எனவும், நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் தொகை மற்றும் குடும்ப ஓய்வூதியத் தொகை ஒப்பளிப்பு செய்து வெளியிடப்படும் செயல்முறையின் நகல் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

5. 2020-2021-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.17-இன் போது, முந்தைய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களுக்கு வழங்கப்படும் தொகை குறித்து, இன்னபிறவற்றுடன் பின்வருமாறும் ஆணைகள் வெளியிடப்பட்டன:-

அ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட நிதிக்கு அரசால் வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டிக் கணக்கில் நிலுவையில் உள்ள தொகையான ரூ.23,08,07,746/-ஐ அரசுக் கணக்கில் செலுத்த கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

ஆ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் ஆகிய திட்டங்கள் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும் தொகையான ரூ.1000/-ஐ நடப்பு நிதியாண்டில் அக்டோபர் 2020 முதல் மார்ச் 2021 முடிய 6 மாதங்களுக்கு முழுவதுமாக அரசே வழங்கலாம் என முடிவு செய்து, அதற்கு தேவையான கூடுதல் தொகையான ரூ.3,13,04,985/-ஐ ஒப்பளிப்பு செய்தும் மற்றும் அத்தொகை முழுமையாக அரசுக் கணக்கிலிருந்தே பெற்று வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

6. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2019-2020-ஆம் நிதி ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட கணக்கில் உள்ள இருப்பு தொகைக்கு 6.5 விழுக்காடு வட்டித் தொகையான ரூ.22,89,53,736/- ஆனது, 01.04.2019 முதல் 31.03.2020 வரை கணக்கிடப்பட்டு, நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

7. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் கைத்தறி ஆணையர், 2020-2021-ஆம் ஆண்டிற்கான நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இருப்பு தொகைக்கு 3 விழுக்காடு வட்டித் தொகையினை 2021-2022-ஆம் நிதி ஆண்டில் வழங்கும் பட்சத்தில் தோராயமாக ரூ.10.50 கோடி தேவைப்படும் என்றும், ஆனால் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இருப்பு தொகைக்கு முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக வழக்கமாக வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையினை நிறுத்தி, நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டங்களை செயல்படுத்த மாதாந்திர ஓய்வூதிய தொகையான ரூ.1000/-ஐ முழுவதும் அரசே வழங்கும் பட்சத்தில் 2021-2022-ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.27.00 கோடியுடன் அதிகபட்சமாக கூடுதல் தொகையாக ரூ.8.00 கோடி மட்டுமே தேவைப்படும் என்றும், இதனால் அரசுக்கு சுமார் ரூ.2.50 கோடி அளவுக்கு நிதி சுமை குறைய வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

8. மேற்காண் நிலையில், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையான ரூ.1000/-ஐ அக்டோபர் 2020 முதல் மார்ச் 2021 வரை வழங்கியது போல், ஏப்ரல் 2021 முதல் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களுக்கான முழு பங்களிப்பினையும் அரசுக் கணக்கிலிருந்தே வழங்க அரசின் கொள்கை அளவிலான ஆணையும், அத்திட்டங்களுக்காக 2021-2022-ஆம் நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.27.00 கோடியுடன் கூடுதல் தொகையான ரூ.8.14 கோடியை (தோராயமாக) ஒப்பளிப்பு செய்து வழங்குமாறும் கைத்தறி ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்காண் கூடுதல் தொகைக்குரிய கணக்கீட்டு விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | விவரம் | | | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 2021–22–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு (கணக்கு தலைப்பு 2851 00 103 KR 30903) | | | 27,00,00,000/– |
| 2. | செப்டம்பர் 2021 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை | | | 16,57,54,057/– |
| 3. | மீதமுள்ள தொகை (1–2) | | | 10,42,45,943/– |
| 4. | அக்டோபர் 2021 முதல் மார்ச் 2022 வரையிலான 6 மாத காலத்திற்கு தேவைப்படும் தொகை (மாதமொன்றிற்கு ரூ.1000/– வீதம்) | திட்டம் | பயனாளிகள் | 16,58,94,000/– |
| | | மு.ஓய்வூதியம் | 26447 | |
| | | கு.ஓய்வூதியம் | 1202 | |
| | | மொத்தம் | 27,649 | |
| | | | (27649 X1000X6) | |
| 5. | 01.01.2021 முதல் 30.06.2021 முடிய திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட புதிய பயனாளிகளுக்கு தேவைப்படும் தொகை | திட்டம் | பயனாளிகள் | |
| | | மு.ஓய்வூதியம் | 823 | 1,15,56,505/– |
| | | கு.ஓய்வூதியம் | 47 | |
| | | மொத்தம் | 870 | |
| 6. | 01.07.2021 முதல் 31.12.2021 வரை திட்டத்தில் அனுமதிக்கப்படும் புதிய பயனாளிகளுக்கு அவரவர் தகுதி பெறும் நாள் முதல் 31.03.2022 வரை தேவைப்படும் தொகை (தோராயமாக) | | | 82,94,000/– |
| 7. | தேவைப்படும் மொத்த தொகை (தோராயமாக) (4+5+6) | | | 18,57,44,505/– |
| 8. | தேவைப்படும் கூடுதல் தொகை (தோராயமாக) | | | 8,14,98,562/– |

9. மேலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக வழங்கப்பட்டு வந்த சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட வட்டி வீதத்தினை 9.5 விழுக்காட்டிலிருந்து 6.5 விழுக்காடாக 01.04.2019 முதல் மறுநிர்ணயம் செய்தும் கொள்கை அளவிலான ஆணை வழங்குமாறும் கைத்தறி ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

10. மேலே பத்தி 8 மற்றும் 9–இல் உள்ள கைத்தறி ஆணையரின் கோரிக்கையினை அரசு ஆய்வு செய்து பின்வரும் ஆணைகள் அரசால் வெளியிடப்படுகின்றன:–

அ) ஏப்ரல் 2021 முதல் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் தொகையின் முழு பங்களிப்பினையும் அரசுக் கணக்கிலிருந்தே வழங்க கொள்கை அளவிலான ஆணையிடப்படுகிறது.

ஆ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட வட்டி வீதத்தினை 01.04.2019 முதல் 9.5 விழுக்காட்டிலிருந்து 6.5 விழுக்காடாக மறுநிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

இ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த ஏற்கனவே திருத்தப்பட்ட வரவு செலவு திட்டம் 2021–2022–இல் ஒதுக்கீடு செய்த தொகைக்கு மேலே, கூடுதல் நிதியாக ரூ.8,00,00,000/–ம் (ரூபாய் எட்டு கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

11. மேலே பத்தி 10 (இ)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2851 – 00. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103. கைத்தறித் தொழில்கள் – மாநிலச் செலவினங்கள் – KR. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்காக நிதியுதவி – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

IFHRMS (த.தொ.கு.2851 00 103 KR 30903) (பற்று)

12. மேலே பத்தி 10(இ)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை மேலே பத்தி 11-இல் காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைத்து, கைத்தறி ஆணையர் கீழ்க்காணும் தன் வைப்புக் கணக்கில் எதிர் வரவு வைக்கப்பட வேண்டும்:-

"K. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும் - (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் - 8443 - 00. பொது வைப்புத் தொகைகள் - 800. ஏனைய வைப்புகள் - AT. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் / முதியோர் ஓய்வூதியத்தின் வைப்புத் தொகைகள் - 801 - வரவுகள் 02 - வட்டி பெறாதவை ".

IFHRMS (த.தொ.கு.8443 00 800 AT 80102) (வரவு)

13. மேற்கண்டவாறு பற்று வைத்து, எதிர் வரவு வைத்த பின்னர், கூட்டுறவு சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட விதிமுறைகளின்படி கைத்தறி ஆணையர் / கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநரால் தேவைக்கேற்ப ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை கீழ்க்காணும் வைப்புக் கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட வேண்டும்:-

"K. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும் - (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் - 8443 - 00. பொது வைப்புத் தொகைகள் - 800. மற்ற வைப்புகள் - AT. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் / முதியோர் ஓய்வூதியத்தின் வைப்புத் தொகைகள் - 802 - வழங்குதல் 02 - வட்டி பெறாதவை ".

IFHRMS (த.தொ.கு. 8443 00 800 AT 80202) (செலவுகள்)

14. மேலே பத்தி 10(இ)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுத் தொகையான ரூ.8,00,00,000/-ஐ, 2021-2022-ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலே பத்தி 10 (இ)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது.

15. மேலே பத்தி 10(இ)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கைத்தறி ஆணையரால் அந்தந்த சரகங்களுக்கு ஒதுக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

16. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட விதிகளின்படி தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத்தினை அளித்து அது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு கைத்தறி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

17. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக, மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள, நிபந்தனைகளை தவறாது பின்பற்றும்படி மீண்டும் கைத்தறி ஆணையர் வலியுறுத்தப்படுகிறார்.

18. இவ்வாணை, நிதித்துறையின் இசைவு பெற்ற அலுவல் சார்பற்ற எண்.120/ ADS (GKT)/நிதி(தொழில்கள்)/2022, நாள் 30.03.2022-இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தர்மேந்திர பிரதாப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர் :
கைத்தறி ஆணையர், சென்னை – 600 104.
மாநில தலைமைக் கணக்காயர் (A&E) / (Civil Audit) / (CAS), சென்னை – 600 018 / 09.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001.

நகல் :
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-IV, சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நிதி(Industries / BG-I / BG-II / W&M-I)த் துறை, சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, சென்னை – 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஏ/பி)த் துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

30/3/22
அரசு சார்புச் செயலாளர்.

30/3/2022